**24.12.2024**

**C.C. No.54/2024**

**ம.சா. 1 சோமசுந்தரம்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**1.**நான் பி.ஏ. பொருளாதாரம் படித்துள்ளேன். என்ன வேலை பார்க்கிறேன் என்றால் சன் டிவியில் 2009–2011 வரை தஞ்சாவூரில் வேலை பார்த்தேன். 2011–2021 வரை லண்டன் சென்றுவிட்டேன். இந்த வழக்கின் எதிரியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 10 வருடங்களாக தெரியும். இந்த வழக்கின் எதிரியை யார் மூலமாக பழக்கம் என்றால் தஞ்சாவூரில் எதிரி எனது பக்கத்து வீட்டில் வசித்ததன் மூலமாக பழக்கம். எனது பிள்ளைகளின் படிப்பிற்காக எனது குடும்பம் தஞ்சாவூரில் உள்ளது. நான் தற்போது காரைக்குடியில் வசித்து வருகிறேன். எதிரியின் குடும்ப உறுப்பினர்களை எனக்கு நன்கு தெரியமா என்றால் தெரியும். எதிரியின் கணவர் பெயர் தெரியுமா என்றால் எதிரியின் கணவர் பெயர் ராஜேந்திரன், எதிரியின் மகன் பெயர் அசோக்ஹரிஹரன். எதிரியின் கணவர் ராஜேந்திரன் ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரி ஆவார். எதிரியின் மகன் கட்டிட பொறியாளர். எதிரியின் வீட்டினரை எனது குடும்பத்தாருக்கும் நன்றாக தெரியும்.

2.எந்த தேதியில் எதிரி கடன் கேட்டார் என்று எனது புகாரிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ, அறிவிப்பிலோ சொல்லியிருக்கிறேனா என்றால் கடன் கொடுத்த தேதியான 05.11.2022 அன்று கேட்டார். கேட்டவுடன் பணத்தை கொடுத்துவிட்டேனா என்றால் ஆமாம். கடன் கொடுத்த பணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் கடன் கொடுப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பாக நிலம் ஒன்றை விற்பனை செய்திருந்தேன். அதில் கிடைத்த பணம் என்னிடம் இருப்பது தெரிந்துதான் எதிரி என்னிடம் பணம் கேட்டார். கடன் கொடுத்த தேதியில் யார்யார் வீட்டில் இருந்தார்கள் என்றால் எனது வீட்டில் எனது தம்பியும், எனது நண்பரும் இருந்தார்கள். எதிரியுடன் யார் வந்தார்கள் என்ற விவரத்தை எனது அறிவிப்பிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. என்னிடம் கடன் பெற்ற பின்னர் தஞ்சாவூரில் வைத்து எதிரி ஒருமுறை நேரடியாக வட்டி செலுத்தினார். நான் வெளிநாட்டில் இருந்த சமயத்தில் 2017 ம் வருடம் வீடு வாங்கினேன்.

3.தற்போது வீடு கட்டி வருகிறேன். வீடு வாங்கிய சமயத்தில் எனது மனைவி எதிரியின் மகன் அசோக் ஹரிஹரனிடம் ரூ.10 லட்சம் வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது மனைவி அவ்வாறு எந்த பணமும் வாங்கவில்லை. 2017 ல் அசோக்ஹரிஹரனிடம் கடன் பெற்று 2,3 மாதங்களில் திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை. வழக்கு கடனுறுதிசீட்டை யார் பூர்த்தி செய்தது என்றால் பூர்த்தி செய்த நிலையில் கடனுறுதிச்சீட்டு எடுத்து வரச் சொன்னதால் எதிரி பூர்த்தி செய்தே கொண்டு வந்தார். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் உள்ள எதிரியின் கையொப்பமும், ம.சா.ஆ.2 காசோலையில் உள்ள எதிரியின் கையொப்பமும் வித்தியாசமாக உள்ளது என்றால் இல்லை. புரோநோட்டில் சாட்சியாக கையொப்பம் செய்த நபர்கள் இருவரும் எனக்கு தெரிந்தவர்கள்.

4.ஒருவர் எனது தம்பி, மற்றொருவர் எனது நண்பர். சொன்ன தேதியில் எதிரி என்னிடம் கடன் பெறவில்லையென்றாலும் வழக்கிற்காக கடனுறுதிச்சீட்டு உற்பத்தி செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் எதிரியும், அவரது கணவரும் என்னை சந்திக்கவில்லையென்றாலும், அவ்வாறு சந்தித்து கடன் பெற்றிருந்தால் எதிரியின் கணவர் கடனுறுதிச்சீட்டில் சாட்சியாக கையொப்பம் செய்திருப்பார் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் பெற்றதாக சொல்லும் தேதியில் கடனுறுதிச்சீட்டை தவிர வேறு எந்த ஆவணமும் எதிரியிடம் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. இவ்வழக்கு கடனைத்தவிர எதிரிக்கோ, எனக்கோ என்குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கோ பணபரிவத்தனை உள்ளதா என்றால் தெரியாது.

5.என்னிடம் காட்டப்படும் கடன் மற்றும் அடமான ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள சோமசுந்தரம் என்பது நான்தான். மேற்படி ஒப்பந்தத்தில் எனது மனைவி, எதிரி, எதிரியின் கணவர் மற்றும் மகனுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டுள்ளதாக கண்டுள்ளதா என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்ததில் இவ்வழக்கு காசோலையை எதிரி எனது மனைவியிடம் கொடுத்ததாக கண்டுள்ளதா என்றால் சரிதான். எதிரிக்கும், எனக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லையென்றாலும், எதிரியின் மகனுக்கும், என் மனைவிக்கும் இடையே இருந்த கொடுக்கல் வாங்கலில் கொடுத்திருந்த காசோலை நான் தவறாக பயன்படுத்தி

இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியலல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்பந்தத்தின் அசல் என் மனைவியிடம் உள்ளது என்றால் தெரியாது. கேட்டுதான் சொல்லவேண்டும். எனது மனைவியை சாட்சியாக விசாரணை செய்ய தயாரா என்றால் தயாராக இல்லை. என் மனைவி சாட்சியாக விசாரணைசெய்தால் உண்மை வெளிப்படும் என்பதால் அவரை சாட்சியாக விசாரணை செய்ய மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் அழைத்து வரவேண்டாம் என்பதால் மறுக்கிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's)
விரைவு நீதிபதி காரைக்குடி